**தமிழச்சி தங்கபாண்டியன்**

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# உணவு பாதுகாப்பு தொடர்பாக தமிழ்நாட்டில் 32 ஆலோசனை குழுக்கள் தமிழச்சி தங்கபாண்டியனுக்கு ஒன்றிய அரசு பதில்

**புதுடெல்லி, ஜூலை.-28**

நாட்டில் உணவுப்பொருட்களில் கலப்படத்தை கண்டறிய ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உணவு பாதுகாப்புக்குழுவை அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?, கலப்படத்தை தடுக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்பது தொடர்பான கேள்விகளை தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் வைத்திருந்தார்.

**இதற்கு ஒன்றிய சுகாதாரத்துறை இணை அமைச்சர் பாரதி பிரவின் பவார் இன்று எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:-**

உணவு பாதுகாப்பு தொடர்பான விஷயங்களில் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு உதவவும், ஆலோசனைகள் வழங்கவும் மாவட்ட அளவிலான ஆலோசனைக்குழுக்களை அமைக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் கடந்த 2018-ம் ஆண்டு கடிதம் எழுதியது.

இதன் அடிப்படையில் நாடு முழுவதும் மொத்தமுள்ள 729 மாவட்டங்களில் 636 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான ஆலோசனை குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம்-2006 இன் விதிகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அமலாக்குதல் போன்றவை மாநில அரசுகளிடமே உள்ளது. அதன்படி உணவு பாதுகாப்பு ஆணையர்கள் கலப்படத்தை தடுப்பதற்காக சோதனை நடத்தி, உணவு மாதிரிகளை சேகரித்து ஆய்வுக்கு அனுப்பி கலப்படத்தை கண்டறிகிறார்கள். இதன்பேரில் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த வகையில் கடந்த ஆண்டு 4817 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

******